| PG-AN-1011 | MATN-11 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION – JULY, 2024.

Tamil

First Year

இக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

I. எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க : $(5 \times 5 = 25)$

1. கோவில் வழிபாடு கவிதையில் கவிமணி குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

2. கவிஞர் நா. காமராசன் – குறிப்பு வரைக.

3. கதவு சிறுகதையின் கதைக்கருவினை எடுத்துக்காட்டுக.

4. தமிழில் புதின இலக்கியத்தின் வளர்ச்சியினை எடுத்துரைக்க.

5. ஒப்புரவறிதலில் மு. இராகவையங்கார் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.

6. அ. வெண்ணிலா – குறிப்பு வரைக.

7. கவிஞர் வைரமுத்துவின் 'புதிய ஏற்பாடு' கவிதையில் இடம்பெறும் கருத்துகளைக் கூறுக.

8. மரபுக் கவிதைகள் – விளக்கம் தருக.

II. எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க : $(3 \times 15 = 45)$

9. புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி நிலைகள் குறித்து விரிவாக எழுதுக.

10. தோப்பில் முகமது மீரானின் ‘காலத்தின் ஆவர்த்தனம்’ சிறுகதையின் பண்புகளை ஆராய்க.

11. ‘புத்துமண்’ புதினத்தின் கதைப்பின்னலைச் சான்றுடன் விளக்குக.

12. ‘தருமம் தலைகாக்கும்’ எனும் கட்டுரைத் தலைப்பில் திரு.வி.க. குறிப்பிடுவனவற்றை விரிவாக எழுதுக.

13. தமிழ்க் கவிதை மரபுகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

———————

| PG–AN–1012 | MATN–12 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION — JULY 2024

## Tamil

## First Year

### இடைக்கால இலக்கியம்

Time : 3 hours                    Maximum marks : 70

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் எட்டு வினாக்களுள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் 300 சொற்களில் விடையளிக்கவும்.

1. திருநாவுக்கரசரின் சமயத் தொண்டு குறித்து எழுதுக.

2. திருமங்கையாழ்வாரைத் திருமால் தடுத்தாட்கொண்டமையை எடுத்துரைக்க.

3. தமிழில் குறவஞ்சி இலக்கிய வடிவம் குறித்து விளக்குக.

4. அழகர் கிள்ளைவிடு தூதின் அமைப்பும் சிறப்பும் குறித்து விளக்குக.

5. குணங்குடியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக விவரிக்க.

6. இரட்சண்ய யாத்திரீக நூல் அமைப்பினை எடுத்துரைக்க.

7. நமச்சிவாயப் பதிகச் செய்திகளைக் கூறுக.

8. சமரச சன்மார்க்க சங்கம் பற்றி விளக்குக.

பகுதி ஆ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 1000 சொற்களில் விடையளிக்கவும்.

9. திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாற்றினை விவரிக்க.

10. பாவை இலக்கிய நயம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

11. சயங்கொண்டார் காட்டும் போர்க்களக் காட்சிகளை விவரிக்க.

12. மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழின் வழி மதுரை மாநகரின் சிறப்புகளை எடுத்தியம்புக.

13. அழகர் கிள்ளைவிடு தூதின் இலக்கியச் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

————————

**PG–AN–1013** **MATN–13**

P.G. DEGREE EXAMINATION —
JULY 2024.

Tamil

First Year

தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் எட்டு வினாக்களுள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் 300 சொற்களில் விடையளிக்கவும்.

1. தொல்காப்பியம் குறித்து விளக்குக.

2. எழுத்துகளது பொதுப் பிறப்பை விளக்குக.

3. எழுத்துச் சாரியைகளை விளக்குக.

4. மெய்யெழுத்துகளின் பிறப்பு முறையை விளக்குக.

5. அல்வழிப் புணர்ச்சியைச் சான்று காட்டி விளக்குக.

6. புணர்ச்சி வகைகளை விளக்குக.

7. எகர ஈறுகளின் அல்வழிப் புணர்ச்சியை விளக்குக.

8. சார்பெழுத்துகளை விளக்குக.

பகுதி ஆ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 1000 சொற்களில் விடையளிக்கவும்.

9. மொழி முதல், மொழி இறுதி எழுத்துகள் குறித்து விளக்குக.

10. எழுத்து என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

11. வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

12. ரகர, ழகர ஈற்றுப் புணர்ச்சிகளை விளக்குக.

13. எண்ணுப்பெயர்களுடன் அளவைப்பெயர்கள் புணரும் முறைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

**PG-AN-1014** **MATN-14**

# P.G. DEGREE EXAMINATION - JULY, 2024.

Tamil

First Year

தொல்காப்பியம் – சொல்லதிகாரம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் எட்டு வினாக்களுள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் 300 சொற்களில் விடையளிக்கவும்.

1. ஆகுபெயர் என்றால் என்ன? விளக்குக.

2. வண்ணச் சினைச் சொல் குறித்து விளக்குக.

3. விளி வேற்றுமைக்கும் பிற வேற்றுமைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

4. அஃறிணைப் பெயர்கள் குறித்து விளக்குக.

5. அசைநிலைச் சொற்கள் குறித்து எழுதுக.

6. செய்யுள் விகாரங்களைச் சான்று காட்டி விளக்குக.

7. இடையியல் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

8. தொல்காப்பியரின் உரியியல் கருத்துகளை எடுத்துரைக்க.

பகுதி ஆ — ($3 \times 15 = 45$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 1000 சொற்களில் விடையளிக்கவும்.

9. செப்பும் வினாவும் பற்றி விளக்குக.

10. வேற்றுமையின் பாகுபாடுகள் பற்றி விவரிக்க.

11. உயர்திணைக்குரிய வினைமுற்றுகளை விளக்கிக் கட்டுரை வரைக.

12. பலபொருள் தரும் இடைச் சொற்களைச் சான்று காட்டி விளக்குக.

13. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

| PG-AN-1015 | MATN–15 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION – JULY, 2024.

## Tamil

## First Year

### தமிழ் மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

Time : 3 hours Maximum marks : 70

I. எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க. (5 × 5 = 25)

1. தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளைக் கூறுக.

2. தகவல் ஊடகங்களில் தமிழ் இடம்பெறுமாற்றை விளக்குக.

3. மாற்றிலக்கணம் – குறிப்பு வரைக.

4. ஆற்றுப்படை நூல்கள் குறித்து எழுதுக.

5. சித்தர் இலக்கியம் – விளக்கம் தருக.

6. சிற்றிலக்கியங்களின் இயல்புகளைச் சான்றுடன் விளக்குக.

7. படிமம், குறியீடு – விளக்குக.

8. இரட்டைக் காப்பியங்கள் குறித்து எழுதுக.

II. எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. (3 × 15 = 45)

9. திராவிட மொழிகளின் பழமைக்குறித்துச் சான்றுடன் விரிவாக எழுதுக.

10. தமிழ்ச் சொற்பொருள் மாற்றத்திற்குரிய காரணங்களை எடுத்துக்காட்டுக.

11. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பண்பாட்டுக் கூறுகள் குறித்து விளக்குக.

12. தமிழ் இலக்கண எழுச்சிக்காலம் குறித்துச் சான்றுடன் விளக்குக.

13. படைப்பிலக்கிய உத்திகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

---

| PG-AN-1016 | MATN–21 |
|---|---|

# P.G DEGREE EXAMINATION – JULY, 2024.

Tamil

Second Year

சங்க இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

I. எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.

1. திருமாவளவனின் சிறப்பைப் பட்டினப்பாலை வழி விளக்குக.

2. 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவைப் போல'— விளக்குக.

3. வெள்ளாங்குருகுப் பத்தில் இடம்பெறும் கருத்துகளை எழுதுக.

4. 'எனையராயினும் வேட்டோரல்லது'—எனும் நற்றிணைப் பாடல் கருத்தை விரிவாக எழுதுக.

5. 'கூந்தல் விறலியர்'—தலைப்பில் அமைந்த பதிற்றுப்பத்துப் பாடல் கருத்தை விளக்குக.

6. ‘சுடர்த்தொடிகேளாய்’–எனத் தலைவி தோழிக்குக் கூறிய செய்திகளைக் கூறுக.

7. ‘தைந்நீராடல்’ குறித்துப் பரிபாடல் வழி விளக்குக.

8. திருமுருகாற்றுப்படை–குறிப்பு வரைக.

பகுதி ஆ — ($3 \times 15 = 45$ மதிப்பெண்கள்)

II. எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.

9. காவிரிப்பூம்பட்டினத்தில் பறந்த பல்வேறு கொடிகளின் தன்மைகளை எழுதுக.

10. குறுந்தொகையில் பாடல் தொடரால் பெயர் பெற்ற பாடலாசிரியர்கள் குறித்து விளக்குக.

11. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் சிறப்புகளைப் பதிற்றுப்பத்து வழி விளக்குக.

12. ‘இரும்புலிகொண்மார் நிறுத்தவலையுள் ஓர் ஏதில் குறுநரிபட்டற்றால்’ என்று தோழி கூறும் குறிஞ்சிக் கலிப்பாடல் கருத்தை ஆராய்க.

13. அகநானூற்றில் இடம்பெறும் நெய்தல் நிலவருணனையை எடுத்துரைக்க.

**PG-AN-1017** **MATN–22**

P.G. DEGREE EXAMINATION –
JULY, 2024.

Tamil

Second Year

காப்பிய இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.

1. காப்பியங்களுக்குரிய இலக்கணங்களைக் கூறுக.

2. கண்ணகியின் பண்புநலன்களை உரைக்க.

3. மணிமேகலையின் முற்பிறப்பு வரலாற்றினை எழுதுக.

4. பதுமையார் இலம்பகத்தின் கதைப் போக்கினை உரைக்க.

5. அப்பூதி அடிகளார் இறைவன் மீது கொண்ட அன்பின் திறத்தைப் புலப்படுத்துக.

6. வில்லி பாரதம் – குறிப்பு வரைக.

7. சூசையின் பண்புநலன்களை உரைக்க.

8. உமறுப்புலவரின் கவித்திறத்தைச் சான்றுகளுடன் உரைக்க.

பகுதி ஆ — ($3 \times 15 = 45$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

9. புகார்க்காண்டம் மூலம் அறியவரும் வாழ்வியல் செய்திகளை எடுத்துரைக்க.

10. சீவகனின் பண்புநலங்களைப் புலப்படுத்துக.

11. இராவணன்-கும்பகர்ணன் உரையாடலை எடுத்துரைக்க.

12. தருமனும் துரியோதனனும் போரிட்ட திறத்தைப் புலப்படுத்துக.

13. தேம்பாவணியின் கதைப் போக்கினை ஆராய்க.

———————

| PG–AN–1018 | MATN–23 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION — JULY 2024.

தமிழ்

Second Year

தொல்காப்பியம் – பொருளதிகாரம்

Time : 3 hours　　　　Maximum marks : 70

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்க.

1. பிரிவின் வகைகள் குறித்து விளக்குக.

2. களவொழுக்கத்தில் தோழிக்குக் கூற்று நிகழுமிடங்கள் குறித்து விளக்குக.

3. கற்பின்கண் காமக்கிழத்தியர்க்கு நிகழும் கூற்றுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

4. பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் யாவை? அவை தோன்றும் இடங்கள் குறித்து விளக்கி எழுதுக.

5. நால்வகைப் பாக்களிலும் ‘வாழ்த்தியல்’ வகை அமையும் முறைமையைச் சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

6. தலைவன், மனைக்கிழத்தி, தலைவி - ஆகியோர்க்கு உரிய மரபுகள் குறித்து விளக்குக.

7. உள்ளுறையின் வகைகள் குறித்து விளக்குக.

8. இலக்கண நூலாசிரியன் பின்பற்ற வேண்டிய முப்பத்திரண்டு வகையான உத்திகள் குறித்து விளக்கி எழுதுக.

பகுதி ஆ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

9. அகப்பொருள் இலக்கியங்களில் இடம்பெறும் முதல், கரு, உரிப்பொருள்கள் குறித்துக் கட்டுரை வரைக.

10. பாடாண்திணையின் வகைகளையும், அவற்றின் துறைகளையும் சான்றுகள் தந்து விளக்குக.

11. எண்வகை மெய்ப்பாடுகள் குறித்தும், அவை தோன்றும் நிலைக்களன்கள் குறித்தும் விளக்கி எழுதுக.

12. அடியின் வகைகளைக் கூறி, பாக்களுக்குரிய அடிகளை விளக்கி எழுதுக.

13. வண்ணங்களின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

| PG-AN-1019 | MATN-24 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION – JULY, 2024.

## Tamil

### Second Year

### ஒப்பிலக்கியம்

Time : 3 hours　　　　Maximum marks : 70

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.

1. ஒப்பீட்டு உத்திகள் எவை?

2. ஒப்பிலக்கிய ஆய்வுகள் நிகழ்த்திய அறிஞர்கள் குறித்து எழுதுக.

3. தாக்குரவுக் கோட்பாடு – குறிப்பு வரைக.

4. தமிழில் நிகழ்ந்துள்ள ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறித்து எழுதுக.

5. “தன்னுணர்ச்சிப் பாடல்கள்” – குறிப்பு வரைக.

6. திருக்குறளில் நிகழ்ந்துள்ள ஒப்பீட்டு ஆய்வுகள் குறித்து எழுதுக.

7. ஒப்பாய்வில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்புக் குறித்து எழுதுக.

8. ஒப்பாய்வின் மூலம் பெறும் பயன்கள் யாவை?

பகுதி ஆ — ($3 \times 15 = 45$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடையளிக்க.

9. ஒப்பீட்டாய்வுகள் எவ்வெத்துறைகளில் நிகழ்ந்துள்ளன?

10. தமிழில் ஒப்பிலக்கியத் துறையின் வளர்ச்சியை விவரிக்க.

11. ஒப்பிலக்கியக் கோட்பாடுகள் குறித்து எழுதுக.

12. பாரதியின் கவிதைகள் ஒப்பீட்டுக் களங்களாக விளங்கும் பான்மையை விவரிக்க.

13. மேலை நாட்டு வீரயுகப் பாடல்களுடன் தமிழ் வீரயுகப் பாடல்களை ஒப்பிடுக.

———————

| PG–AN–1020 | MATN–25 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

## First Year

### இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.

1. இலக்கியத்தின் இருபெரும் பிரிவுகள் குறித்து எழுதுக.

2. தற்காலத் திறனாய்வின் தன்மைகளை விளக்குக.

3. அரிஸ்டாட்டில் கூறும் அவல உணர்ச்சி நிலை குறித்து எழுதுக.

4. திணை இலக்கியக் கோட்பாடு - விளக்குக.

5. அடிமன இயல்பியல் என்றால் என்ன?

6. திறனாய்வின் பயன்களை எழுதுக.

7. மூலபாடத் திறனாய்வு என்றால் என்ன?

8. புதினத்தின் கூறுகள் குறித்து விளக்குக.

பகுதி ஆ — (3 × 15 = 45 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.

9. தமிழில் திறனாய்வுச் சிந்தனை வளர்ந்த விதத்தை எடுத்துக்காட்டுக.

10. இலக்கியக் கூறுகள் குறித்துச் சான்றுடன் விளக்குக.

11. நனவோடை முறையின் சிறப்பியல்புகளை எழுதுக.

12. திறனாய்வில் உளவியல் முறையின் பங்களிப்பினை விரிவாக விளக்குக.

13. சிறுகதை எழுதும்போது பின்பற்றவேண்டிய பண்புகளை எடுத்துக்கூறுக.

———————